DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 12/2024** |
| Deposition of Witness for | : PW 10 |
| Name | : அருள்செல்வி (மருத்துவர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.05.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 2nd May 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருததுவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்தபோது 26.09.2012ம் தேதி பணியில் இருந்தபோது குருவிகுளம் உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை தலைமைக்காவலர் கிருஷ்ணசாமி மூலமாக பெற்று 27 வயது மதிக்கத்தக்க துரைச்சாமி என்ற ஆள் பிரேதத்தை அன்றைய தினம் மாலை 4.50 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். பிணவிரைப்புத்தன்மை காணப்பட்டது. அவருடைய வாயிலிருந்து மூக்கிலிருந்தும் ரத்தம் வடிந்து காணப்பட்டது. அனைத்து பற்களும் உடைந்து காணப்பட்டன. கீழ்க்கண்ட வெளிக்காயங்கள் காணப்பட்டன.

1. முகத்தில் இடதுபக்கம் முழுவதும் சிதைந்து காணப்பட்டன.
2. தாடை எழும்பின் நடுப்பகுதி உடைந்து காணப்பட்டன.
3. நெஞ்சுப்பகுதி முழுவதும் சிராய்ப்புக்காயங்கள் காணப்பட்டன.
4. இரண்டு கைகள் மற்றும் முதுகில் சிறுசிறு சிராய்ப்பு காய்ங்கள் காணப்பட்டன.

உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. தலைபகுதியை திறந்துபார்த்தபோது 200மிலி அளவில் உறையாத ரத்தம் மூளையின் அடிப்பகுதியில் காணப்பட்டது.
2. கபால எழும்பின் அடிப்பகுதியில் வலது மற்றும் இடதுப்பக்கத்தில் Petrosquamous என்ற எலும்பில் வலதுபக்கம் 7 செமீ அளவில் கீறல் காணப்பட்டன. இடதுபக்கம் 8 செமீ அளவில்கீறல் காணப்பட்டன.
3. மூளையை வெட்டிப்பார்த்தபோது ஆங்காங்கே ரத்தம் உறைந்து காணப்பட்டன.
4. இருதயம், நுரையீரல், கணையம், கல்லீரல் ரத்தம் கன்றிப்போய் காணப்பட்டன.

பிரேத பரிசோதனையை மாலை 5.50 மணிக்கு நிறைவு செய்தேன். தலையில் ஏற்பட்ட காயத்தினால் உண்டான அதிர்ச்சியினாலும் ரத்தக்கசிவினாலும் இறந்திருக்கலாம் என்றும், பிரேதத்தின் இறப்பானது எனது பிரேத பரிசோதனைக்கு 3 முதல் 6 மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கலாம் என கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

முதல்விசாரணையில் நான் கூறிய காயங்கள் ஒரு நபர் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி பாலத்தின் சுவற்றில் மோதி பாலத்திலிருந்து கீழே விழுந்திருந்தாலும் ஏற்படக்கூடியது என்றால் சரிதான்.